

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு மீனவர் சங்கத்தின் தலைவர் – துரை மகேந்திரன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, – கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்களை மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக அறிவித்து வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதையொட்டி நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, என். ஆர். இளங்கோ, கழக செய்தி தொடர்பு தலைவர் – டி.கே.எஸ். இளங்கோவன், கழக அமைப்புச் செயலாளர் – ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புக் குழு செயலாளர் – கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், இந்திய மீனவர் நல முன்னணி சங்கத்தின் தலைவர் மா.கி. சங்கர் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்களை மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக அறிவித்து வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதையொட்டி நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, என்.ஆர். இளங்கோ, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புக் குழு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மகளிரையும் உயர்த்தும்

# சமூக விடுதலை இலக்கினை அடுத்த 5 ஆண்டுகளில் அடைவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘உலக மகளிர் நாள்’ வாழ்த்துச் செய்தியில் உறுதி!



சென்னை, மார்ச். 8-

**“தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மகளிரையும் உயர்த்தும் சமூக விடுதலை இலக்கினை அடுத்த ஐந்து ஆண்டுகளில் உறுதியாக அடைவோம்’’ என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள உலக மகளிர் நாள் வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ‘உலக மகளிர் நாள்’வாழ்த்துச் செய்தி வருமாறு:-

உலகை இயக்கும் பேராற்றலான என் அன்புக்குரிய தாய்மார்கள், சகோதரிகள் அனைவருக்கும் இனிய உலக மகளிர் நாள் வாழ்த்துகள்!

**தமிழ்பெண்கள் வரலாறு படைத்து வருகின்றனர்!**

“பெண் ஏன் அடிமையானாள்?” எனக் கேள்வியெழுப்பி விழிப்புணர்வை ஏற்படுத்தினார் தந்தை பெரியார். அவரது கொள்கை வழித் தோன்றலாக முத்தமிழறிஞர் கலைஞர் பெண்களுக்குச் சொத்தில் சமபங்கு உரிமை அளித்துச் சட்டம் நிறைவேற்றினார், அரசுப் பணியிடங்களில் இட ஒதுக்கீடு அளித்தார். இத்தகைய பெண்ணினக் காவலர்களின் வழியிலான நமது திராவிட மாடல் அரசு இந்த ஆட்சியையே மகளிரின் உயர்வுக்கான ஆட்சியாக நடத்தி வருகிறது.

பெண்கள் சுதந்திரமாக ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்குச் சென்று வர விடியல் பயணம், அவர்களின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், அவர்களின் உயர்கல்வியை உறுதிசெய்யும் புதுமைப்பெண், அவர்களின் சமையல் சுமையைக் குறைக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், அவர்கள் பாதுகாப்பாகத் தங்கத் தோழி விடுதிகள், தனியார் தொழிற்சாலைகளிலும் அவர்களுக்குக் குறிப்பிட்ட விழுக்காட்டில் பணியிடங்கள் ஒதுக்கீடு, பெண்களின் பெயரில் சொத்துப்பதிவு செய்தால் பதிவுக்கட்டணத்தில் சலுகை, 14 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கு இலவசமாகக் கருப்பைவாய்ப் புற்றுநோய் தடுப்பூசி, ஆதி திராவிட - பழங்குடியினப் பெண்களுக்கான நன்னிலம் நிலவுடைமைத் திட்டம், திருக்கோயில்களில் பெண் ஓதுவார்கள் நியமனம், பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புக்காக உலக வங்கியுடன் இணைந்த TNWESAFE திட்டம், கிராமப்புறங்களில் இருந்தும் பெண் தொழில் முனைவோர்களை வளர்த்தெடுக்கும் TNRISE திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களால் நமது திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டு மகளிர், வெல்லும் தமிழ்ப் பெண்களாக வரலாறு படைத்து வருகின்றனர்.

**மகளிர் மனம் மகிழ்ச்சி!**

அடுத்து அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில், மகளிர் உரிமைத் தொகை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் எனவும் இப்போதே அறிவித்துள்ளதுடன், மூன்று மாதங்களுக்கான தொகையை முன்பணமாகவும், 2 ஆயிரம் ரூபாயைக் கோடைக்காலச் சிறப்பு நிதியாகவும் தமிழ்நாடு முழுவதும் 1.31 கோடி மகளிரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைத்து அவர்கள் மனம் மகிழச் செய்துள்ளோம்.

தரமான கல்வியும், உயர் வேலை வாய்ப்பு களும் தன்னிறைவும், பொருளாதாரச் சுதந்திரமும், அனைத்துக்கும் மேலாக சிறந்த உடல்நலனும் கொண்டவர்களாகத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மகளிரையும் உயர்த்தும் சமூக விடுதலை இலக்கினை அடுத்த 5 ஆண்டுகளில் உறுதியாக அடைவோம்!

ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட தமிழ்நாடு எனும் என் இலட்சியக் கனவை முன்னின்று நிறைவேற்றப் போவது நீங்கள்தான்! உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது மகளிர் நாள் நல்வாழ்த்து கள்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.3.2026) சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்ட நீதியரசர் சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி அவர்களை சந்தித்து, சால்வை அணிவித்து மலர்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.



இனமானப் பேராசிரியர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச் செல்வன் உள்ளார்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் நடைபெற்ற முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணையும் விழாவில் பங்கேற்பதற்காக விமானம் மூலம் மதுரை வந்தபோது மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி வரவேற்றார். உடன் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



கழக வேட்பாளராக மாநிலங்களவை தேர்தலில் போட்டியிடும் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா, முன்னாள் கழகப் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்களை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி உள்ளார்.

### முதல்வர் முன்னிலையில் ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள்

# 1 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணையும் விழா!

## மதுரை வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

மதுரை, மார்ச். 8-

மதுரை திருமங்கலத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்கள் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோருடன், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் அ.தி.மு.க.விலிருந்து விலகி தி.மு.க.வில் இணையும் விழா நடைபெற உள்ளது. தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த அ.தி.மு.க. மற்றும் அ.ம.மு.க. நிர்வாகிகள் இணைய உள்ளனர்.

இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக, தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து விமானம் மூலம் மதுரை வருகை தந்தார். மதுரை விமான நிலையத்தில் முதலமைச்சரை ஏராளமான தி.மு.க.வினர், பொதுமக்கள் அன்புடன் வரவேற்றனர்.

முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், அமைச்சர்கள் இ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி. மூர்த்தி, கே.ஆர். பெரிய கருப்பன் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திமுக மாவட்ட செயலாளர்கள், தி.மு.க. நிர்வாகிகள் என ஏராளமானோர் வரவேற்றனர்.


# 200 தொகுதி வெற்றி!

இமை சோராது உழைப்பதில்
First CM

இரட்டிப்பு
வளர்ச்சியை கொடுப்பதில்
Best CM

200 தொகுதி
வெற்றிகளோடு
Next CM

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்





**மருது. அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு துணைத் தலைவர்


### தீரர்கள் கோட்டமாம் திருச்சி சிறுகனூரில் நடைபெறும்

# தி.மு.க. மாநில மாநாட்டில் கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையேற்று, சிறப்புரையாற்றுகிறார், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில், தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் நாளை (09.03.2026 **திங்கட்கிழமை**), மாலை 03.00 மணியளவில், திருச்சி மாவட்டம் சிறுகனூரில், **“ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்”** தி.மு.க. மாநில மாநாடு நடைபெற உள்ளது. அது சமயம் இம்மாநாட்டில் கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, கடலூர், சிதம்பரம், புவனகிரி ஆகிய ஐந்து சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை, வார்டு, வட்ட கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள் (BLA2), பாக நிலைக்குழு உறுப்பினர்கள்(BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள்(BDA), ஸ்டாலினின் மகளிர் படை நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.